முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள்.17.03.2026

O.S. No.101/2023

பி.வா,சா-1 எழில்அரசு

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் எனக்காகவும் என் அம்மா மற்றும் தம்பிக்காகவும் சேர்த்து சாட்சியம் அளிக்கிறேன். அவர்கள் இருவரும் எனக்கு எழுத்துபூர்வமாக அதிகாரம் கொடுத்தார்களா என்றால் இல்லை வாய்மொழியாக சொன்னார்கள். என் அம்மா 2/12 தென்தாமரைகுளம் என்ற முகவரியில் வசித்து வருகிறார்கள். என் தம்பி பெங்களூரில் வேலை பார்த்து வருகிறார். என் அம்மா குடும்ப நிகழ்வுகளுக்கும் கோவில்களுக்கும் செல்வார் என்றால் சரி. சர்வே எண்.376/11 ல் எங்களுக்கு 2.5 ஏக்கர் பாத்தியம் என்றால் சரியல்ல 376/11 எ 1 ல் 2.5 ஏக்கர் ஆகும். 376/11 ல் வாதி 1993 ல் 3 சென்ட் எனது பாட்டியிடம் இருந்து கிரயம் வாங்கினார் என்றால் சரி. வாதி விலைக்கு வாங்கிய உடன் அவர் இடத்தை சுற்றி காம்பவுண்ட் சுவர் கட்டினார் என்றால் சரியல்ல 2011 ல் கட்டினார்.

வா.சா.ஆ.1 தோரய வரைபடம் படி கிடப்பில் சொத்துக்கள் உள்ளது என்றால் சரி. வழக்கு பி பட்டிகை சொத்தின் கிழக்கு பக்கம் 12 அடி பஞ்சாயத்து ரோடு உள்ளது என்றால் சரி. எனது நிருபண வாக்குமூலத்தில் 376/11 ல் 2.5 ஏக்கர் எங்களுக்கு பாத்தியம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரி. வா.சா.ஆ.1 தோரய வரைபடம் படி வாதியின் வீடு உள்ளது என்றால் சரி. வாதி வடக்கு பக்கம் பார்த்து 15 அடி வீதியில் ஒரு கேட் அமைத்துள்ளார் என்றால் சரி. வாதி 1993 ல் விலை வாங்கிய ஆவணத்தை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். வாதி 1993 ல் விலை வாங்கிய பிறகு வீடு கட்ட பஞ்சாயத்தில் அனுமதி மற்றும் வரைபடம் வாங்கியதை நான் பார்த்ததில்லை எனக்கு தெரியாது. வாதியின் வீட்டிற்கு மின் இணைப்பு உள்ளதா என்றால் உள்ளது. வாதியின் மின் இணைப்புக்கு

மின்கம்பத்தினை வழக்கு பி பட்டிகை சொத்தில் வைத்துள்ளார் என்றால் சரியல்ல. பி பட்டிகை சொத்தே இல்லை மின்கம்பம் இல்லை மின்வயர் செல்வதற்கான கம்பி மட்டுமே வாதியின் சொத்திற்குள் வைத்துள்ளார். எந்த மின்கம்பத்தில் இருந்து மின்இணைப்பு பெற்றுள்ளது என்றால் பஞ்சாயத்து ரோட்டில் உள்ள மின்கம்பத்தில் இருந்து இணைப்பு வருகிறது.

வா.சா.ஆ.8 ஆவணம் வாதியின் கட்டிடத்திற்கான கட்டிட அனுமதி என்றால் சரி. வங்கியில் கடன் பெறுவதற்காக சட்ட ரீதியான விசாரணையில் அவரது சொத்திற்கு பாதை இல்லை என்று கண்டுபிடித்து கடன் இல்லை என்று நிராகரித்தார்கள். மேற்படி விவரத்தை என் பாட்டி என்னிடம் சொல்லியுள்ளார். மேற்படி விவரங்களை எனது எதிருரையிலோ முதன்மை வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரி. வாதியின் 1993 கிரய பத்திரத்தில் கிழக்கு பக்கத்தில் உள்ள என்னுடைய சொத்தின் வழியாக போக்குவரத்து செய்ய அவகாசம் செய்ய கூறப்பட்டுள்ளது என்றால் அவகாசம் கொடுக்கவில்லை போக்குவரத்து செய்ய தடங்கல் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில் சொன்ன அவகாசத்தை தான் வாதி தனக்கு வேண்டும் என்று கேட்டுள்ளார் என்றால் சரியல்ல பி பட்டிகை சொத்து என்பதே இல்லை 12 அடி பாதை அவகாசமும் கொடுக்கபடவில்லை. அவரது கிரய ஆவணத்தின் படிதான் உரிமை கேட்கிறார்.

376/11 வழியாக வாதியின் குடிநீர் இணைப்பு வருகிறது என்றால் சரியல்ல அது எங்களுக்கு கொடுக்கபட்ட குடிநீர் இணைப்பு ஆகும். வாதிக்கு குடிநீர் இணைப்பு இல்லை வாதியின் தங்கை வீட்டிற்கு குடிநீர் இணைப்பு உள்ளது. வாதியின் தங்கை வீடு வாதியின் வீட்டிற்கு கிழக்கு பக்கம் உள்ளது. வா.சா.ஆ.1 தோரய வரைபடத்தில் சொன்ன படி வாதியின்

தங்கை வீடு உள்ளது என்றால் சரி. வாதியின் இடத்தில் வாதி மரப்பட்டறை வைத்துள்ளார் என்றால் இல்லை. மரப்பட்டறை சர்வே எண்.369/3 எ ல் உள்ளது. 369/3 எ ல் வாதியின் மரப்பட்டறை இருப்பதாக எனது எதிர்வழக்குரையிலோ சாட்சியத்திலோ சொல்லவில்லை என்றால் சரி. வாதி விலைக்கு வாங்கிய வழக்கு எ பட்டிகை சொத்திலும் அதை தொட்டு மற்றொரு சொத்திலும் மரப்பட்டறை வைத்துள்ளார் என்றால் சரியல்ல. வாதி அவரது வீட்டிற்கும் மரப்பட்டறைக்கும் மின்இணைப்பு பெற்றுள்ளார் என்றாலும் அதற்கான மின்இணைப்பு 376/11ன் வழியாக செல்கிறது என்றால் சரி.

வாதி சுவர் கட்டி கேட் அமைத்துள்ளார் என்று சொல்லியிருப்பது 2011க்கு பிறகு அமைத்தார். அந்த கேட் 15 அடி உள்ள கேட் என்றால் சுமார் 9 முதல் 10 அடி வரை இருக்கும். வாதி கேட் அமைத்ததற்கோ மின்இணைப்பு எடுத்ததற்கோ என் பாட்டி என் அப்பா நான் யாரும் ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரி. வாதி வீடு கட்டியதற்கு கட்டுமான பொருட்களை 376/11 ல் வீதி வழியாக டெம்போமூலம் எடுத்து சென்றார் என்றால் சரி எங்களுடைய அனுமதியின் பெயரில் எடுத்து சென்றார். எழுத்துபூர்வமாக அனுமதி கொடுத்தோமா என்றால் இல்லை. 2011 மற்றும் 2020ல் வாதி அவர் வீட்டை புதுப்பித்து கட்டினார் என்றால் எனக்கு தெரியாது. கட்டுமான பொருட்களை எடுத்துசெல்ல அனுமதித்தது யார் என்றால் என் தாத்தா. என் தாத்தா அனுமதி கொடுத்தது குறித்து யார் சொன்னார்கள் என்றால் என் தாத்தாவே எனக்கு சொன்னார்.

வாதியின் மரபட்டறைக்கான பொருட்கள் 376/11 ன் பாதை வழியாக செல்கிறது என்றால் சரிதான் எங்கள் அனுமதியுடன் செல்கிறது. வாதி மரங்கள் சீவகூடிய மெசின் வைத்து தொழில் செய்கிறார் என்றால் சரி. எங்கள் அனுமதியின் பெயரில் கட்டுமான

பொருட்கள் மற்றும் மரசாமான்களை எடுத்து செல்வதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் வாதி அவருக்குரிய உரிமையின் அடிப்படையில் எடுத்து செல்கிறார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.11 புகைப்படத்தில் உள்ள வீடு வாதியின் வீடு என்றால் சரி. எனது வாக்குமூலத்தில் பாதை இல்லை என்பதை தெரிந்து கொண்டுதான் குறைந்தவிலைக்கு சொத்தை கிரயம் பெற்றதாக சொல்லி இருப்பதில் என்ன விலை என்றால் 3 சென்ட் 3500 ரூபாய் ஆகும். ஆனால் அந்த தொகையை பாட்டி வாங்கவில்லை என்று என்னிடம் சொல்லியுள்ளார்.

வாதியின் 1993 ம் வருட கிரய பத்திரத்தில் நடைபாதை என்று சொல்லவில்லை என்றாலும் போக்குவரத்துக்கான அவகாசம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றாலும் சரி. வாதி எ பட்டிகை சொத்தின் அருகே உள்ள சொத்தை பால்பாண்டியனிடம் இருந்து கிரயம் வாங்கியது 2003 ம் ஆண்டு ஆகும். அந்த கிரய சொத்து எ பட்டிகை சொத்துக்கு தெற்கு பக்கம் உள்ளது அதற்கும் பாதை இல்லை. அந்த விலைக்கு வாங்கிய சொத்தினால் எங்களுக்கு விரோதமோ ஆட்சேபனையோ இல்லை.வாதி வழிபாதை இல்லாத சொத்துக்களை குறைந்த விலைக்கு வாங்கும் பழக்கம் கொண்டவர் என்று சொல்லியிருப்பதில் அவர் எங்கெங்கு சொத்துக்கள் வாங்கி உள்ளார் என்றால் அவரது தனிப்பட்ட விவரங்கள் எனக்கு தெரியாது அது குறித்து நான் சொல்லிய விவரம் தவறு. என் அப்பா 2010 ல் இறந்தார். என் அப்பா காலம் வரை அவர் எந்த ஆட்சேபனையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் அப்பா எந்த ஆண்டு ஆட்சேபனை செய்து எழுத்துபூர்வமாக மின்வாரியத்திற்கோ பஞ்சாயத்திற்கோ மனு கொடுத்தாரா என்றால் தெரியாது.

என்னுடைய சொத்தான சர்வே எண்.376/11 எ 1 க்கு கிழக்கு பக்கமுள்ள 12 அடி பஞ்சாயத்து ரோடு தான் பாதை என்றால் சரி. அதை தொட்டு மேற்கு பக்கம் தான் வாதி செல்லகூடிய பாதை உள்ளது என்றால் சரியல்ல வாதி சொத்திற்கு கிழக்கு பக்கம் தங்கம் வீடு உள்ளது. அதன் பிறகு எங்களுடைய கிடப்பு இடம்தான் உள்ளது. பாதை இல்லை. தங்கம் வீட்டிற்கு வடக்கு பக்கம் வாதியின் 12 அடி பாதை உள்ளது என்றால் சரியல்ல. உண்மையில் வாதியின் 12 அடி பாதை உள்ளது என்றாலும் அதனை பல்வேறு வகையில் இடையூறு செய்ததாலும் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. தங்கத்தின் கிரய பத்திரத்தில் பாதை அவகாசம் சொல்லபடவில்லை. வாதி வீட்டிற்கு மேற்கு பக்கமுள்ள முத்துகுட்டி பத்திரத்தில் போக்குவரத்து செய்ய அவகாசம் உள்ளது.

முத்துகுட்டி என்பவர் வாதி வீட்டிற்கு வடக்கு பக்கமுள்ள பாதை வழியாக சென்று வருகிறார் என்றால் சரியல்ல வடக்கு பக்கமுள்ள எங்களுடைய கிடப்பில் சென்று வருகிறார். பி பட்டிகை சொத்தில் பாதையாகவே கிடப்பில் உள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக அதனை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது எதிர்வழக்குரையில் மனிதாபிமான அடிப்படையில் வாதி கனரக வாகனத்தை கொண்டு செல்ல அனுமதித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரி. எனது எதிருரையிலும் முதன்மை வாக்குமூலத்திலும் உண்மைக்கு புறம்பான சங்கதிகளை கூறி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவை மீறி பாதையை அழிமதி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் எனக்கு எதிராக தாக்கல் செய்த நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை மனுவில் எனக்கு தண்டனை வழங்கபட வேண்டும் என்றால் சரியல்ல.